V.V. Titanium Pigments Pvt. Ltd.,
A-81, Sipcot Industrial Complex,
South Veerapandiapuram PO,
Thoothukudi – 628002, Tamil Nadu, India

# தகவல் தெரிவிப்பவர் கொள்கை

## 1.0 முன்னுரை

வி.வி. டைட்டானியம் பிக்மென்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi) தன் நிறுவனம் மற்றும் ஊழியர்களின் நடவடிக்கைகளை நிர்வகிக்க வேண்டியக் கோட்பாடுகள் மற்றும் தரங்களைக் குறிக்கும் வர்த்தக நடத்தை மற்றும் நெறிமுறைகளின் குறியீட்டினை ஒற்றுள்ளது. ஏதேனும் சட்ட நெறிமுறைகளை யாரேனும் தேவையில்லாமலோ அல்லது வேண்டுமென்றோ மீறினால் அத்தகைய மீறல் நிறுவனத்தில் சீரிய விஷயமாகும். சட்ட நெறிமுறை மீறல்களைச் சுட்டிக்காட்டும் ஊழியர்களை முறைக்கேடுகள் செய்ய முடியாது. ஆகையால் தகவல்த் தெரிவிப்போர் கொள்கை, நிறுவனத்தில் ஊழியர்களின் மோசமான நடத்தை, சந்தேகத்திற்கிடமான மோசடி அல்லது ஒழுங்கற்றத்தன்மைச் சட்டப்பூர்வ அல்லது ஒழுங்கு முறைத் தேவைகளின் மீறல்களை வரன்முறைப்படுத்தத் தகவல்த் தெரிவிப்பவர்களுக்கு எந்த வித பயமும் பாதிப்பும் இல்லாமல் இருக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2.0 வரையறைகள்

அ) “நிறுவனம்” வி.வி. டைட்டானியம் பிக்மென்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் (VVTi) நிறுவனத்தைக் குறிக்கிறது.

ஆ) “பாதுகாக்கப்பட்ட வெளியீடு” என்பதுத் தகவல்த் தெரிவிப்பவர் மூலம் நெறிமுறையற்ற நடத்தைகளைப் பற்றியச் செயல்விளக்கத் தகவல்களை நன்நம்பிக்கையோடு அறியப்படுதல்.

இ) “தகவல்த் தெரிவிப்பவர்” என்றால் இந்தக் கொள்கையின் கீழ்ப் பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளை அளிக்கும் இயக்குநர், தொழிலாளிகள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது நிறுவனத்துடன் தொடர்புடைய மற்றப் பங்குதாரர்களும் ஆவர்.

ஈ) “ஒழுங்கு நடவடிக்கை” என்றால் விசாரணை முடிந்தவுடனோ அல்லது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதோ, எச்சரிக்கை, அபராதம் விதித்தல், அலுவலகக் கடமைகளிலிருந்து இடைநீக்கம் போன்ற நடவடிக்கைகள் அல்லது வேறு ஏதாவது நடவடிக்கைகளை நிறுவனத்தின் நிர்வாகம் தவறின் தன்மைக்கேற்பச் சரியெனக் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்வது.

### 3.0 கொள்கை யாருக்குப் பொருந்தும்

இந்தத் தகவல்த் தெரிவிப்பவர் கொள்கை நிறுவனத்தின் இயக்குநர், தொழிலாளிகள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் நிறுவனத்தின் மற்றப் பங்குதாரர்களுக்குப் பொருந்தும்.

### 4.0 கொள்கையின் நோக்கம்

கீழ்க்கண்டப் பிரச்சனைகள் இந்தக் கொள்கையின் கீழ் அடங்கும். அவை:

1. நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் வளங்களை மோசடி செய்தல்
2. நலன்களில் கருத்து வேற்றுமை
3. இரகசியத் தகவல்களை முறைக்கேடாகக் கையாளுதல்
4. கொள்முதல் மோசடி செய்தல்
5. பரிசுப் பொருட்கள் மற்றும் கேளிக்கைகளை ஏற்றுக்கொள்ளுதல்
6. தவறான நிதி அறிக்கை அளித்தல்
7. பாலியல் துன்புறுத்தல்
8. லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுதல்
9. உள் வர்த்தகம் செய்தல்
10. வரி மோசடி செய்தல்
11. ஏதாவது ஒருத் தன்மையில் துன்பப்படுத்துதல்
12. பழிவாங்குதல் அல்லது கொடுமைப்படுத்துதல்
13. பாகுபாடுக் காணல்
14. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்
15. சுற்றுச்சூழல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை மீறுதல்
16. ஒரே நேரத்தில் வேறு நிறுவனத்திலும் வேலை செய்தல்.

### 5.0 நிறுவனத்தின் பாதுகாக்கப்பட்ட வெளியீடுக் குறித்துத் தெரிவிக்கும் செயல்முறைகள்

அ) இந்தச் செயல்முறையின்படி ஏதேனும் தவறு நிகழ்ந்தால் உடனே அதைத் தகவல்த் தெரிவிப்பவர் கொள்கையின்படிப் பாதுகாக்கப்பட்ட வெளியீட்டினை:

i. மின் அஞ்சல்: hr@vvtitanium.in மூலம் நிறுவனத்தின் மேலிடத்திற்கு தெரியப்படுத்தலாம்.

ii. தபால் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

பெறுநர்:

பொது மேலாளர்,
வி.வி. டைட்டானியம் பிக்மென்ட்ஸ் பிரைவெட் லிமிடெட்,
A-81, சிப்காட் இன்டஸ்ட்ரீயல் காம்ப்ளக்ஸ்,
தெற்கு வீரபாண்டியபுரம்,
தூத்துக்குடி – 628002, தமிழ்நாடு, இந்தியா.

ஆ) நிர்வாகத்தின் இயக்குநர் மற்றும் தொழிலாளர்களும் தங்களின் அடையாளங்களை மறைத்துப் பாதுகாக்கப்பட்ட வெளியீடுகளாக, ASO அறை அருகிலுள்ளப் பரிந்துரைப் பெட்டியில் போடலாம். ஆனால் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பங்குதாரர்களிடம் தங்கள் அடையாளங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும்.

## 6.0 தகவல்த் தெரிவிப்பவரின் பாதுகாப்பு

அ. நிறுவனத்தில் நிகழும் தவறுகள் மற்றும் தொழிலாளர்களின் தவறான நடத்தைகள் மேலும் மற்ற நிகழ்வுகள் அனைத்தும் தகவல்த் தெரிவிப்பவர் மூலம் நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படுவதனால் அவரைப் பாகுபாடிலிருந்து, பழிவாங்குவதலிருந்து, தாழ்த்துவதிலிருந்து அல்லது எந்த நியாயமற்ற வேலை வாய்ப்பு நடைமுறைகளிலிருந்துப் பாதுகாப்பது இந்த நிறுவனத்தின் நிர்வாகமே பொறுப்பு.

ஆ. நிறுவனத்தில் ஏதேனும் விசாரணை நிகழும் போது வெளிப்படையான முக்கியமான சாட்சியாகவோ அல்லது விசாரணைக்கு உதவுபவராகவோ ஒருத் தனி நபர் ஆஜர்ப்படுத்தப்படும் போது அந்த நபருக்குத் தகவல்த் தெரிவிப்பவருக்கு அளிக்கப்படும் பாதுகாப்புப் போன்றுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

இ. தகவல்த் தெரிவிப்பவர் ஏதேனும் பொய்யானக் குற்றச்சாட்டுகளைக் கூறும்போது அதனால் அவர்மேல் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளில் இருந்துப் பாதுகாப்பினை இந்தக் கொள்கையின் கீழ் வழங்கப்படமாட்டாது.

ஈ. தகவல்த் தெரிவிப்பவரின் மேல் தவறான நடத்தையின் கீழ் ஏதேனும் ஒத்த அல்லதுத் தனித்தப் புகார்கள் அல்லதுக் குற்றச்சாட்டுகள் இருப்பின் இந்தக் கொள்கையின் கீழ் அவருக்குப் பாதுகாப்புக் கிடையாது. விசாரணையின் போதுப் புகார்தாரரும் குற்றம் புரிந்தவர் என்றுக் கண்டறியப்பட்டால் நிறுவனம் சுயேட்சையாக அதனைக் கையாளும்.

**7.0 மறை வெளியீடுகளைக் கையாலும் செயல்முறை**

அ. ஒருப் புகாரைப் பெற்றவுடன், ஆரம்ப விசாரணை மேற்கொண்டு விசாரணைக்கு ஏற்றப் புகார்தானா என்பதனை முடிவுச் செய்ய வேண்டும். அப்படி ஆம் என்றால் எப்படி அதனை வடிவம் செய்வது என்பதுக் குறித்து முடிவு செய்ய வேண்டும். சிலப் புகார்களை விசாரணை இல்லாமல் ஒப்புதல் நடவடிக்கை மூலம் தீர்க்கலாம்.

ஆ. புகாரை மதிப்பீடு செய்தப்பின்பு, நிறுவனம் புகார்தாரருக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்டவற்றைத் தெரிவிக்கும்:

i. புகார்ப் பெற்றுக் கொண்டதை அத்தாட்சி செய்தல்.

ii. அதனைக் கையாளும் முறையைப் பற்றி முன்மொழிக் குறியீடு செய்தல்.

iii. மேலும் விசாரணை நடைபெறுதல் பற்றியத் தகவல்கள், அப்படி விசாரணை நடத்தவில்லை என்றால் ஏன், எதற்கு நடத்தவில்லை என்பதனைக் குறித்தத் தகவல்கள்.

இ. பிரச்சனையின் தன்மை, அதில் அடங்கியிருக்கும் சிரமங்கள் மற்றும் தகவல்களில் உள்ளத் தெளிவுப் போன்றவற்றைச் சார்ந்தேப் புகாரைக் கையாளும் நிறுவனத்திற்கும் புகார்தாரருக்கும் உள்ளத் தொடர்பு அளவு இருக்கும். தேவைப்பட்டால் புகார்தாரரை நாடிக் கூடுதல் தகவல்கள் பெறப்படும்.

ஈ. தகவல்த் தெரிவிப்பவர் இந்தக் கொள்கையின் கீழ்த் தெரிவித்ததன் விளைவாக அவருக்கு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டாலோ அல்லது அவர்ப் பழிவாங்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டாலோ நிறுவனம் அவரைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

உ. தகவல்த் தெரிவிப்பவர்ப் பிரச்சனைக்குரிய விஷயத்தைச் சரியாகத் தெளிவாகத் தெரிவித்துள்ளார் என்பதனை அவரிடம் உறுதிபடக் கூறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிறுவனம் ஏற்றுக் கொண்டுச் செயல்படும்.